**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்செந்தூர்**
**முன்னிலை : திரு. மீ. வ உ சிதம்பரம், B.A., M.L.,**
**நீதித்துறை நடுவர், திருச்செந்தூர்**
**2026 ஆம் ஆண்டு, ஜீலை மாதம் 23 ஆம் நாள் வியாழக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 373/2023**
**CNR NO : TNTTOF-00-3389-2023**
*****

**<u>தமிழக அரசு:-</u>**
ஆத்தூர் காவல் நிலைய குற்ற எண். 118/2023
காவல் உதவி ஆய்வாளர் மூலம் . . . . குற்ற முறையிடுனர்

/எதிர்/

1. சசிந்தோ, வயது 45/2026,
த/பெ.ஜெரால்டு,
208, மரக்குடி தெரு,
புன்னைக்காயல்.
2. ரமேஷ், வயது 50/2026,
த/பெ.ஜெரால்டு,
3/165 பி, வடக்குத் தெரு,
புன்னைக்காயல்.
3. கிறிஸ்டன்,வயது 51/2026,
த/பெ. தாசன்
4/5, பொன்மாணிக்கம் தெரு,
புன்னைக்காயல். ..... குற்றஞ்சாட்டப்பட்டவர்கள்

குற்றமுறையீட்டாளருக்காக : திருமதி. T. வனிதா, அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-1
எதிரிகளுக்காக : திரு. சுந்தரபாபு

கு.வி.மு.ச. பிரிவு **173** இன் கீழ் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் அடிப்படையில் இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 மற்றும் 354 பி ன் கீழான குற்றங்களை கோப்புக்கு எடுக்கப்பட்ட வழக்காகும்.

**<u>தீர்ப்புரை</u>**

**1 <u>குற்றச்சாட்டு</u> :-**

**1.1** இவ்வழக்கின் கடந்த 28.06.2023 ம் தேதி 1 வது எதிரி (சசிண்டோ) புன்னக்காயல் இருதயபுரத்தின் வழியாக வரும் பைப் லைனிலிருந்து வரும் தண்ணீரை தனது வீடு கட்டும் வேலைக்கு பயன்படுத்தியது தொடர்பாக அதனை தட்டிக்கேட்க வந்த பஞ்சாயத்து தலைவியான புகார்தாரர் சோபியா என்பவரை 1 வது எதிரி ஆபாசமாக பேசியதாகவும், அப்போது 2 வது எதிரி (ரமேஷ்) புகார்தாரரை கன்னத்தில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்னர் 3 வது எதிரி (கிறிஸ்டன்) புகார்தாரரை ஒரு பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து சேலையை பிடித்து இழுத்து சட்டையை கிழித்து புகார்தாரர் பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்திய குற்றம் புரிந்ததாக எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.2** இவ்வழக்கின் எதிரிகளுக்கு இ.த. சட்டப்பிரிவுகள் 294(பி), 323 மற்றும் 354 பி ன் கீழான குற்றங்களுக்கு குற்றச்சாட்டு செய்யப்பட்டுள்ளது.

**2 <u>கு.வி.மு.ச பிரிவு 207 இன் கீழ் நகல்</u> :**

அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207–இன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3 <u>கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 இன் கீழ் விசாரணை</u> :–**

**3.1** எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர்கள் பொய் வழக்கு என்றும், குற்றவாளிகள் இல்லை என்றும் கூறினர்.

**3.2** இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 354 பி மற்றும் 4 of TNPHW ACT ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால் 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவு 294(பி) மற்றும் 4 of TNPHW ACT, 2 வது எதிரி மீது இ.த.ச பிரிவு 323 மற்றும் 4 of TNPHW ACT, 3 வது எதிரி மீது இ.த.ச பிரிவு 354 பி மற்றும் 4 of TNPHW ACT பிரிவின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவர்களிடம் விளக்கி கூறிய போது, எதிரிகள் பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினர். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4 <u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :–**

புகார்தாரர் சோபியா, கண்ணுற்ற சாட்சிகளான கருப்பசாமி, விமலன் விஜயகுலராஜ் மற்றும் கூடுதல் சாட்சியாக காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. சுடலைமுத்து என்பவரும் அ.சா.1 முதல் அ.சா.5 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள், அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :–**

5.1 அ.சா.5 சுடலைமுத்து தன்னுடைய சாட்சியத்தில், கடந்த 28.06.2023 ம் தேதி 14.30 மணிக்கு உதவி ஆய்வாளர் செல்வக்குமார் நிலைய பொறுப்பிலிருந்த போது, அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த அ.சா.ஆ.3 புகார் மனுவைப் பெற்று, அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவ இடம் சென்று அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரிவரைபடம் தயார் செய்து, பின்னர் அ.சா.1 க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரணை செய்து அவர் வழங்கிய அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று பெற்று, பின்னர் எதிரிகளை கைது செய்து காவல் நிலைய பிணையத்தில் விடுவித்ததாகவும், அதன் பிறகு இவ்வழக்கின் சட்டப்பிரிவை அ.சா.ஆ.8 சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை மூலம் மாற்றம் செய்து இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் பட்டியல் சாட்சியான 9 நீதிமன்றத்தில் முன்னிலையாக இயலாததால் அ.சா.5 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

5.2 அ.சா 1 சோபியா, தன்னுடைய சாட்சியத்தில், கடந்த 2023 ம் ஆண்டு பஞ்சாயத்து தலைவராக இருந்தபோது ஊரில் தண்ணீர் சரியாக வரவில்லை என்று புகார் வந்ததாகவும், எதிரிகள் வீடு கட்டிக்கொண்டிருந்ததாகவும், அப்போது எதிரிகளுக்கும் அ.சா.1 க்கு வாய் தகராறு ஏற்பட்டதாகவும், பின்னர் போலிசார் எழுதாத வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கியதாகவும், அவரிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள அ.சா.ஆ.1 கையெழுத்து அவருடையது தான் என்றும், தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதாகவும், எதிரிகளுடன் சமாதானமாக செல்ல எதிரிகள் அவரை மிரட்டவோ, கட்டாயப்படுத்தவோ இல்லை என்றும், எதிரிகள் தாக்கல் செய்துள்ள அ.சா.ஆ.2 சமாதான மனுவில் அவரும் கையொப்பம் செய்துள்ளதாகவும் பிறழ்

சாட்சியம் ஆகியுள்ளார்.

5.3 இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 வரையானோர்கள் தங்களுடைய நீதிமன்ற சாட்சியத்தில் புன்னக்காயல் ஊரில் தண்ணீர் பிரச்சனை ஏற்பட்டதால் பைப் லைனை சரி செய்து கொண்டிருந்தாகவும் எதிரிகள் வீட்டின் அருகே தான் பிரச்சனை நடந்ததாகவும், மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும் பிறழ் சாட்சியம் ஆகியுள்ளார்கள்.

5.4 இவ்வழக்கின் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான ப.சா.3 அந்தோணி சாமி, பார்வை மகஜர் சாட்சிகளான கில்டஸ் மற்றும் ஜேசு ஆகியோர்கள் அரசு தரப்பில் நீக்கறவு செய்யப்பட்டுள்ளார்கள்.

**<u>6. கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) இன் கீழ் விசாரணை</u> :–**

6.1. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவர்களிடம் விளக்கி கேட்ட போது, அவர்கள் பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள்.

**<u>7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u> :–**

எதிரிகள் மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 354 பி மற்றும் 4 of TNPHW ACT ன் கீழான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**<u>8. சாட்சியங்கள் மதிப்பீடு</u> :–**

8.1. இவ்வழக்கின் கடந்த 28.06.2023 ம் தேதி 1 வது எதிரி (சசிண்டோ) புன்னக்காயல் இருதயபுரத்தின் வழியாக வரும் பைப் லைனிலிருந்து வரும் தண்ணீரை தனது வீடு கட்டும் வேலைக்கு பயன்படுத்தியது தொடர்பாக அதனை தட்டிக்கேட்க வந்த பஞ்சாயத்து தலைவியான அ.சா.1 சோபியா என்பவரை 1 வது எதிரி ஆபாசமாக பேசியதாகவும், அப்போது 2 வது எதிரி அ.சா.1 யை கன்னத்தில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதாகவும், பின்னர் 3 வது எதிரி அ.சா.1 யை ஒரு பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து சேலையை பிடித்து இழுத்து சட்டையை கிழித்து அ.சா.1 பெண்மைக்கு களங்கம் ஏற்படுத்திய குற்றம் புரிந்தததாக அ.சா.ஆ 3 புகார்மனுவின் மூலம் அறியமுடிகிறது. ஆனால் புகார்தாரரான அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.4 வரையானோர்கள் அரசு தரப்பு வழக்கை ஆதரித்து சாட்சியம் அளிக்காததால் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை அரசு தரப்பு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.2 அடுத்தபடியாக, இவ்வழக்கில் மற்ற கண்ணுற்ற சாட்சியான ப.சா.3 அந்தோணி அரசு தரப்பில் சாட்சியாக முன்னிலைப்படுத்தாததை பார்க்கும் போது எதிரிகள் தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக அரசு தரப்பு நிருபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.3 அடுத்தபடியாக, இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான பார்வை மகஜர் சாட்சிகளான கில்டஸ் மற்றும் ஜேசு ஆகியோர்கள் அரசு தரப்பில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தாதை பார்க்கும் போது அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம், அ.சா.ஆ.5 பார்வை மகஜர் விசாரணை அதிகாரி சொன்ன விதத்தில் தான் தயார் செய்யப்ப்பட்டதா என்பதை அரசு தரப்பில் நிருபணம் செய்ய தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.4 அடுத்தப்படியாக அ.சா.ஆ.7 விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழை பரிசீலனை செய்து பார்கையில் அ.சா.1 க்கு காயம்

ஏற்பட்டதாகவே அறிய முடிகிறதே தவிர, 2 வது எதிரியின் செய்கையால் தான் காயம் ஏற்பட்டதா என்று அறிய முடியவில்லை. எனவே, மேற்படி காயச்சான்றிதழை வைத்து மட்டும் 2வது எதிரி மீதான குற்றச்சாட்டை நிருபணம் செய்ய இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

8.5 இவ்வழக்கில் அ.சா.5 சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் மீது குற்றச்சாட்டை நிருபணம் செய்ய இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

எனவே, மேலே விவரிக்கப்பட்டுள்ள விவாதங்களின் அடிப்படையில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படாததால், இந்த வழக்கில் சந்தேகத்தின் பலனை பெற எதிரிகள் தகுதியானவர்கள் ஆகிறார்கள்.

**9. முடிவு:-**

9.1 முடிவில், எதிரிகளுக்கு எதிராக வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(பி), 323, 354பி மற்றும் 4 of TNPHW ACT கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து, அவர்களை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

9.2. இவ்வழக்கில் வழக்குச் சொத்து பொருள்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, அது பற்றிய உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

9.3 இவ்வழக்கில் எதிரிகள் குவிமுச பிரிவு 437 (A) ன் கீழ் எழுதி கொடுத்த தனி நபர் பிணை முறி ஆவணம் மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 23.07.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

V O Chidambaram M

Digitally signed by V O Chidambaram M
Date: 2026.07.23 20:20:11 +0530

நீதித்துறை நடுவர்
திருச்செந்தூர்

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| வரிசை எண் | சாட்சிகள் பெயர் | சாட்சிகள் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. சோபியா | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. கருப்பசாமி | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு. விமலன் | மற்றொரு கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. விஜயகுலராஜ் | மற்றொரு கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.5 | திரு. சுடலைமுத்து | சிறப்பு உதவி ஆய்வாளர் |

**2. அரசுத் தரப்பு சான்றாவணங்கள்**

| வரிசை எண் | தேதி | சான்றாவணங்கள் | கீழ்கண்ட நபர்கள் மூலம் ஆவணங்கள் குறியீடு |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டது. |
| அ.சா.ஆ.1 | 28.06.2023 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 22.07.2026 | சமாதான மனு | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | 28.06.2023 | புகார்மனு | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 28.06.2023 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | 28.06.2023 | பார்வை மகஜர் | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | 28.06.2023 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | 01.07.2023 | விபத்து பதிவேடு மற்றும் காயசான்று | அ.சா.5 |
| அ.சா.ஆ.8 | 01.07.2023 | சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை | அ.சா.5 |

3. அரசு தரப்பு சான்று பொருள் –இல்லை

குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி, இல்லை

V O Chidambaram M

Digitally signed by V O Chidambaram M
Date: 2026.07.23 20:20:22 +0530

நீதித்துறை நடுவர்
திருச்செந்தூர்

குறிப்பு :–

1. இவ்வழக்கில் எந்தவொரு சாட்சியமும் மூன்று தடவைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

2.வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3.வழக்கின் விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்துள்ளார்கள்.